**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 19.01.2026**
**OS. No. 142/2018 and OS.No.98/2020**
**வழக்கு சாட்சி PW.1–இந்துமதி , க/பெ.சந்திரன்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

<u>அ.வ.எண்.142/2018 ன் 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1) என் கணவர் சந்திரனின் முதல் மனைவி நான் தான் என்றும், அவரது வாரிசு சான்றிதழ் கோரியும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். அ.வ.எண்.142/2018 ல் வாதியாவேன். அ.வ.எண்.98/2020 ல் 1ம் பிரதிவாதி ஆவேன். அந்த வழக்கில் 2, 3 பிரதிவாதிகள் என்னுடைய பிள்ளைகள் ஆவார்கள். இரு வழக்குகளிலும் மற்ற பிரதிவாதிகள் அரசு அலுவலர்கள் என்றால் சரிதான். அ.வ.எண்.98/2020 ல் என் கணவரின் முதல் மனைவி 1ம் வாதி தான் என பரிகாரம் கோரி அந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) என் கணவர் அரசு பள்ளியில் தலைமை ஆசிரியராக பணி செய்தார். என் கணவர் தரண் மருத்துவமனையில் உடல் நல குறைவால் காலமானார். என் கணவரின் இறுதி சடங்கு சூரப்பள்ளியிலுள்ள அவருடைய வீட்டில் வைத்து செய்யப்பட்டது, நாங்களும் உடன் இருந்தோம். அதற்கு நாங்களும் பங்கு கொடுத்தோம். என் கணவருக்கு ஈம காரியங்கள் மனைவி என்ற முறையில் நானும் பார்த்துகொண்டேன், என் மகனுக்கு திருமணம் ஆகாததால் காரியங்கள் அனைத்தையும் என் கொழுந்தன் நாகராஜ் மூலம் செய்தோம், என் மகன் உடன் இருந்தார்.

3) என் கணவருக்கு முதல் திருமணம் என்னுடன் தான் நடைபெற்றது, அது கள்ளக்குறிச்சியில் 7 கன்னிமார் கோவிலில் 06.06.1994 ல் நடைபெற்றது. திருமணம் நடைபெற்றதற்கான ஆவணமோ, திருமணத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்களோ உள்ளதா என்றால் நாங்கள் விருப்பப்பட்டு திருமணம் செய்துகொண்டதால் அவ்வாறு எதுவும் புகைப்படங்கள் எடுத்துக்கொள்ளவில்லை. யசோதாவிற்கும், என்

கணவருக்கும் எங்களுக்கு திருமணம் நடைபெற்று 2 வருடங்கள் கழித்து திருமணம் நடந்தது. அந்த திருமணத்திற்கு நான் ஏதேனும் ஆட்சேபனை செய்தேனா என்றால் திருமணம் நடைபெற்ற பிறகு தான் என் கணவரை கட்டாயப்படுத்தி திருமணம் செய்து வைத்ததாக அவர் சொன்னதன் பேரில் தெரியவந்தது.

4) என் கணவர் இறந்த பிறகு அரசு அலுவலர்களிடன் மனு ஏதேனும் அளித்தேனா என்றால் கொடுத்திருந்தேன். அதேபோல் யசோதா தரப்பிலும் மனு கொடுக்கப்பட்டிருந்தது, இரண்டு மனுக்களும் என் கணவருக்கு இரண்டு மனைவிகள் இருப்பதால் நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக் கொள்ளுமாறு சொல்லி முடிக்கப்பட்டுவிட்டது. நாங்கள் கொடுத்த மனுவின் பேரில் அரசு அலுவலர்கள் உரிய முறையில் விசாரணை மேற்கொண்ட பிறகு தான் மனுக்கள் முடித்துவைக்கப்பட்டது என்றால் சரிதான். வழக்கின் தரப்பினராக முனிச்சியம்மாள் என் மாமியார் என்றால் சரிதான். அ.வ.எண்.98/2020ல் என் மாமியார் முனிச்சியம்மாளும் வாதியாக இருந்து அசல் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5) என் கணவரின் பணி பதிவேட்டில் யாருடைய பெயர் நாமினியாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எங்களுக்குள் ஏற்பட்ட தனிப்பட்ட பிரச்சனை காரணமாகத்தான் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அரசு அலுவலர்களை செயல்களால் இல்லை என்றால் சரியல்ல. நீதிமன்ற உத்தரவுப்படி செயல்பட அரசு அலுவலர்கள் தயாராக உள்ளனர் என்றால் எனக்கு தெரியவில்லை.

ஓம்/-திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.